# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2008 / 2009
## HELD IN AUGUST – 2009

## ECS 3.12 – SRI LANKAN ECONOMICS

எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. அ) 'சுதந்திரத்தின் பின்னரான' இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் ஆட்சி மாற்றங்களின் தாக்கத்தினை மதிப்பிடுக.

(10 புள்ளிகள்)

ஆ) இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு இன நல்லிணக்கத்தின் அவசியத்தினை விளக்குக.

(10 புள்ளிகள்)

02. அ) சர்வதேச பொருளாதாரத்தில் இலங்கையின் தேயிலை ஏற்றுமதியின் பங்கினை விளக்குக.

(12 புள்ளிகள்)

ஆ) உள்நாட்டில் தேயிலை உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களைக் குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

03. அ) "பூகோள மயப்படுத்தல் காரணமாக இலங்கையின் கைத்தொழில் துறை பின்னடைந்துள்ளது." விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) நம்நாட்டின் தற்போதைய அரசு, கைத்தொழில் துறை அபிவிருத்திக்கு எத்தகைய முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றதென்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

04. அ) இலங்கையின் விவசாயத்துறையின் பொருளாதார முக்கியத்துவம் குறித்து மதிப்பிடுக.

(10 புள்ளிகள்)

ஆ) அரிசி உற்பத்தி அதிகரிப்பதற்கு தற்போதைய அரசு மேற்கொண்டு வரும் உபாயங்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

05 அ) அண்மைக் காலங்களில் காணப்பட்ட உயர்ந்த பணவீக்கப் போக்கு, நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் எத்தகைய தாக்கத்தினை செலுத்தியுள்ளது என்பதனை ஆராய்க.

(12 புள்ளிகள்)

ஆ) இலங்கையில் பணவீக்கத்தை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் சுட்டெண்களை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

06. அ) கடந்த வரவு செலவுத் திட்டத்தின்போது, அரச வருமானத்தை அதிகரிப்பதற்கு அரசினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளைத் தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

(தொடர்............2ல்)

ஆ) "கடந்த பத்து ஆண்டுகாலங்களில் இலங்கையின் அரச செலவீனம், தொடர்ந்து அதிகரித்துக் காணப்படுகின்றது." இக்கூற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

07. அ) இலங்கையில் வறுமையைக் குறைப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் எந்தளவிற்கு வெற்றியைக் கொடுத்துள்ளது என்பதனை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) இலங்கையில் வேலையில்லாப் பிரச்சினையை தீர்ப்பதற்கு உம்மால் முன்வைக்கப்படும் முன்மொழிவுகள் யாவை?

(10 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுக்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

அ) வடக்கின் வசந்தமும் அபிவிருத்தித் திட்டமும்.

ஆ) இலங்கையில் இடம் பெயர்ந்தோர் பிரச்சினைகள்

இ) இலங்கையில் கல்வி முறையிலுள்ள பிரச்சினைகள்

ஈ) இலங்கையில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் அவசியம்.

(தலா 05 புள்ளிகள்)

*****